[6th August 1966

புலவர் கா. கோவிந்தன் : ஆசிரியர்களுக்கு ரூபாய் 20-க்குக் குறைந்த அளவில் பென்ஷன் இருக்கக்கூடாது, குறைந்தது ரூபாய் 20 அளவுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இப்பொழுதே பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய் 20-க்கும் குறைந்த பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் 20 பென்ஷன் கொடுக்கப்படும் என்று அகௌண்டெண்டு-ஜெனரல் சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அவர்கள் அந்தமாதிரி பென்ஷன் வாங்க முடியும். இப்படிச் செய்தால் இது எளிதிலே முடிந்து விடும். இதற்கு அரசாங்கம் வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுவது எனக்கு சரியாகப் புரியவில்லை. அவர்களுக்கு குறைந்தபட்சமாக பென்ஷன் ரூபாய் 20 இருக்கவேண்டும், முதியோர்களுக்கு உதவி ரூபாய் 20 கொடுக்கிறோம், அந்த அடிப்படையில் ரூபாய் 5, 6, 10 பென்ஷன் வாங்கிக்கொண்டிருப்பவர்களுக்கும் ரூபாய் 20-க்கு பென்ஷன் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஏப்ரல் மாதத்திலிருந்து கொடுக்கப்பட்டு வரும்.

கல்வித்துறை அதிகாரிகளின் சம்பளம்

* 182 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜில்லா கல்வி அதிகாரிகள், ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள், பெண்கள் பள்ளிகளின் இன்ஸ்பெக்ட்ரஸ்கள், சீனியர், ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்குக் கூடுதல் சம்பளமும், பிரயாணப் படியும் கொடுப்பதற்குத் திட்டமிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பாடசாலைகளிலே பரீட்சாதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் பெறுகிற சம்பளம் அங்கே பணி செய்கிற தலைமை ஆசிரியர்கள், நீண்ட காலமாக பணிபுரிந்து வருகிறவர்களுடைய சம்பளத்தைவிட குறைந்த அளவுக்கு இருக்கின்ற நிலைமை இருக்கிறதா ? அத்தகைய பரீட்சாதிகாரிகளுடைய விசேஷ நிலைமையைக் கருதி, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை மாற்றி அமைக்கவோ அல்லது விசேஷ மான்யம் வழங்குவதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி உத்தேசம் இப்பொழுது இல்லை என்றுதான் சொன்னேன்.

Grant to Municipal High Schools

* 183 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to increase its annual grant to Municipal High Schools in the State; and

6th August 1966]

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The matter is under examination.

திரு. வை. சங்கரன்: குறிப்பாக சில முனிசிபாலிட்டிகள் தாங்களே கல்விக்காக பூராவும் செலவழித்து இந்தப் பள்ளிக் கூடங்களை நடத்துவதற்கு முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இவ்வளவு வேண்டும், இவ்வளவு தேவை என்பதைத் தெரிந்து, அரசாங்கம் சீக்கிரம் இந்த மான்யத்தை அளிக்க நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி

**184 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 பிப்ரவரி 12, 13 ஆகிய தேதிகளில் திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) Rs. 5,856.

திரு. து. ப. அழகமுத்து: இந்த விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டபொழுது விவசாயக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. அதற்கான செலவு எவ்வளவு என்று கூறமுடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை.

Unsold books with Bureau of Tamil Publications

*185 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state the value of the books in Tamil including translations and original works lying unsold with the Bureau of Tamil Publications set up by the Government of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The value of the books in Tamil including those released on 14th April 1966 in stock with the Bureau of Tamil Publications, is Rs. 10,02,745.50.

திரு. சா. கணேசன்: இம்மாதிரி அறிவியல் நூல்களை அச்சிட்டதும் முழுவதும் விற்றுவிட முடியாது என்பதும், பல வருஷங்களும் தொடர்ந்து படித்து வரும் மாணவர்களால் வாங்கப்பெற வேண்டிய காரணம் இருப்பதினாலே இவைகளை விற்பதற்குக் கால தாமதம் ஆகும் என்பதையும் கருதி, இத்தகைய வெளியீடுகளில்